23.08.2017

தினமலர்


**பிரதமரின் பயிர் காப்பீட்டு திட்டம் : விழிப்புணர்வு ஏற்படுத்த உத்தரவு**

பிரதமரின் பயிர் காப்பீட்டு திட்டம் குறித்து , விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த, மாவட்ட வேளாண் அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது மாநிலம் . முழுவதும், 1.15 லட்சம் ஏக்கரில் , உணவு தானியங்கள் , எண்ணெய் வித்துக்கள் சாகுபடி செய்யப்படுகின்றன வறட்சி ., இயற்கை சீற்றம் உள்ளிட்ட காரணங்களால் , சில ஆண்டுகளாக , விவசாயிகள், இழப்பை சந்தித்து வருகின்றனர் அதற்கு ., அரசு நிவாரணம் போதுமான அளவில் இல்லை பயிர் காப்பீடு செய்த விவசாயிகள் ., தங்கள் இழப்பை ஈடுசெய்து கொள்கின்றனர் பருவநிலை மாறியுள்ள நிலையில் ., பயிர் காப்பீடு செய்வது, கட்டாய தேவையாக உள்ளதுஆனால் ., அது பற்றிய விழிப்புணர்வு இல்லாமல், விவசாயிகள் உள்ளனர் இதை கருதி ., விவசாயி களிடம் , பயிர் காப்பீடு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிகளை , வேளாண் துறை துவக்கி உள்ளது .

இது குறித்து , வேளாண் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது பிரதமரின் பயிர் : காப்பீட்டு திட்டம் அமலில் உள்ளது; மூன்று காப்பீட்டு நிறுவனங்களை , அரசு தேர்வு செய்துள்ளது பயிர் காப்பீடு குறித்த அவசியத்தை ., விவசாயிகளுக்கு உணர்த்த வேளாண் துறை முடிவெடுத்துள்ளது .
காப்பீட்டு நிறுவனங்களுடன் இணைந்து, இப்பணியை மேற்கொள்ளுமாறு, அனைத்து மாவட்ட வேளாண் துணை இயக்குனர்களுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது இவ்வாறு . .அவர் கூறினார்

- நமது நிருபர் –

**51 அடியை எட்டியது கே.ஆர்.பி, அணை**



கிருஷ்ணகிரி தென்பெண்ணை ஆற்றின் :நீர்ப்பிடிப்பு பகுதியில் , தொடர்ந்து மழை பெய்து வருவதால் , கிருஷ்ணகிரி, கே.பி.ஆர்., அணையின் நீர்மட்டம் , 51 அடியாக உயர்ந்து, கடல் போல் காட்சியளிக்கிறது கர்நாடக மாநிலம் பெங்களூருவில் . தொடர்ந்து மழை பெய்து வருவதால், ஓசூர், கெலவரப்பள்ளி அணையில் இருந்து , 226 கன அடி நீர் திறந்து விடப்பட்டு உள்ளது .

மேலும் தென்பெண்ணை ஆற்றங்கரை நீர்ப்பிடிப்பு பகுதியில் , தொடர்ந்து தினமும் மழை பெய்து வருவதால் , கிருஷ்ணகிரி, கே.பி.ஆர்., அணையின் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது .

இதனால், அணையின் நீர்மட்டம் , நேற்று மாலை நிலவரப்படி , முழு கொள்ளளவான , 52 அடியில், 51 அடியாக உயர்ந்துள்ளது அணைக்கு வினாடிக்கு ., 622 கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது அணையில் இருந்து வினாடிக்கு ., 494 கன அடிநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது இதனால் ., ஐந்தாவது நாளாக நேற்றும் , தென்பெண்ணை ஆற்றங்கரையில் வசிக்கும் , ஐந்து மாவட்ட கிராம மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டு இருந்தது .

அணையின் நீர்மட்டம் முழு கொள்ளளவை எட்டியுள்ளதால் , கடல் போல் காட்சியளிக்கிறதுஇதனால் ., அணையை பார்க்க ஏராளமான சுற்றுலாப் பயணியர் வருகின்றனர்.

**நீர் பிடிப்பு பகுதியில் மழை: பவானி சாகர் நீர்வரத்து அதிகரிப்பு**



பவானி சாகர் நீர் பிடிப்பு பகுதியில் - :, மீண்டும் மழை பெய்வதால் , பவானி சாகர் அணைக்கு, நீர்வரத்து அதிகரித்துள்ளது ஈரோடு மாவட்டத்தின் முக்கிய நீராதாரமாக ., பவானி சாகர் அணை உள்ளது அணை நீர்பிடிப்பு பகுதியான ., மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டிய , நீலகிரி மாவட்ட பகுதிகளில் , சில வாரங்களாக மழை பெய்தது . இதனால், அணை நீர்மட்டம் உயரத் தொடங்கியது . எனினும், சில நாட்களாக , மழை இல்லாத நிலையில் , நீர்வரத்து குறைந்தது நேற்று முன்தினம் ., வினாடிக்கு, 603 கன அடி நீர் வந்தது நேற்று ., 1,660 கன அடியாக அதிகரித்தது .நீலகிரி மாவட்டத்தில் , மீண்டும் மழை பெய்வதே இதற்கு காரணம் நேற்றைய நிலவரப்படி ., அணை நீர்மட்டம், 54.72 அடி; இருப்பு, 5.6 டி.சி.எம்.,யாக இருந்தது குடிநீர் தேவைக்கு ., பவானி ஆற்றில், 150 கன அடி, கீழ்பவானி வாய்க்காலில், 5 கன அடி திறக்கப்பட்டது.

1 அடி உயர்வு கா :விரி நீர் பிடிப்பு பகுதி யில் தீவிரம் அடைந்த பருவமழையால் , ஜூலை, 8ல், 20 அடியாக இருந்த மேட்டூர் அணை நீர்மட்டம் , படிப்படியாக அதிகரித்ததுகடந்த ., 17ம் தேதி, வினாடிக்கு, 22 ஆயிரம் கன அடி நீர் வந்த நிலையில் , அதன்பின், நீர்வரத்து சரிய துவங்கியது நேற்று வினாடிக் .கு, 4,899 கன அடி வந்தது . ஆறு மற்றும் கால்வாயில், 1,300 கன அடி நீர் வெளியேற்றும் நிலையில் , 20ம் தேதி , 52.43 அடியாக இருந்த நீர்மட்டம் நேற்று , 53.32 அடியாக உயர்ந்தது மூன்று . நாட்களில் நீர்மட்டம், ஒரு அடி மட்டுமே அதிகரித்துள்ளது.

**பெரியாறு நீர்மட்டம் உயர்வு**

கூடலூர் நீர்ப்பிடிப்பில் பெய்து வரும் மழையால் :, பெரியாறு அணை நீர்மட்டம் கடந்த 3 நாட்களில் 2 அடி உயர்ந்துள்ளது கடந்த ஒரு வாரமாக பெரியாறு அணை . கடந்த . நீர்ப்பிடிப்பில் மழை பெய்து வருகிறது3 நாட்களாக பெய்த கனமழையால் அணையின் நீர்மட்டம் 2 அடி உயர்ந்துள்ளது .ஆக .19ல் 113 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம், நேற்று மாலை நிலவரப்படி 115 அடியை மொத்த உயரம்)152 அடி அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு .எட்டியது (1776 கனஅடியாக இருந்தது . தமிழகப் பகுதிக்கு குடி நீருக்காக225 கனஅடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது நீர் . இருப்பு1693 மில்லியன் கனஅடியாகும்.

**தொடரும் சாரல் மழையால் மார்லிமந்து நீர்மட்டம் உயர்வு**



ஊட்டி ஊட்டி நகராட்சிக்கு உட்பட்ட பகுதி மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி : செய்ய பார்சன்ஸ்வேலி, மார்லிமந்து, டைகர்ஹில், கோரிசோலா, தொட்டபெட்டா அப்பர், தொட்டபெட்டா லோயர், கோடப்பமந்து லோயர் மற்றும் அப்பர், ஓல்டு ஊட்டி மற்றும் கிளன்ராக் ஆகிய அணைகள் பயன்பட்டு வருகிறது கடந்த இரு ஆண்டுகளாக . நீலகிரி மாவட்டத்தில் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை பொய்த்த நிலையில், பார்சன்ஸ்வேலி அணையை தவிர மற்ற அணைகள் அனைத்தும் வறண்டு போயினஇதனால் ., கடும் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டு பொதுமக்கள்

அவதிக்குள்ளாகினர். கோடை முடிந்தும் இன்றும் தண்ணீர் பிரச்னை தீரவில்லை .

இந்நிலையில், கடந்த இரு வாரங்களாக நீலகிரி மாவட்டத்தில் அவ்வப்போது சாரல் மழை பெய்து வந்தது ஊட்டி மற்றும் புறநகர் பகுதிகளிலும் தொடர் மழை பெய்து . வருகிறதுஇந்நிலையில் ., ஊட்டி ராஜ்பவன் மாளிகை குடியிருப்புகள் , பூங்கா பகுதிகளில் உள்ள குடியிருப்புக்களுக்கு தண்ணீர் வழங்க பயன்படும் மார்லிமந்து அணையில் தண்ணீர் அளவு உயர்ந்துள்ளது தொடர்ந்து ., அவ்வப்போது ஊட்டியில் சாரல் மழை பெய்து வரும் நிலையில் , மேலும் தண்ணீர் அளவு உயரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது தற்போது மார்லிமந்து அணையின் நீர்மட்டம் . உயர்ந்துள்ளதால், மக்களுக்கு தண்ணீர் பிரச்னை குறைய வாய்ப்புள்ளது.

## சாரல் மழை பெய்வதால் சுருளி அருவிக்கு நீர்வரத்து அதிகரிப்பு

கம்பம் தேனி மாவட்ட பகுதியில் சாரல் மழை காரணமாக :சுருளி அருவிக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது தேனி மாவட்டத்தின் தலை சிறந்த சுற்றுலா தலமான சுருளி . அருவிக்கு தினமும் வெளியூர் மற்றும் வெளி மாநிலங்களை சேர்ந்த சுற்றுலா பயணிகள் அவ்வாறு வருபவர்கள் இங்குள்ள . மற்றும் பக்தர்கள் அதிகளவு வந்து செல்கின்றனர் புனித அருவியில் நீராடி விட்டு செல்வதை வழக்கமாக கொண்டுள்ளனர் மேலும் . ஆண்டு தோறும் தமிழ் புத்தாண்டு, வைகாசி விசாகம் , ஆடி அமாவாசை , மகா சிவராத்திரி, பங்குனி உத்திரம் உள்ளிட்ட முக்கிய விஷேச தினங்களின் இங்கு பக்தர்கள் கூட்டம் அலைமோதும்.

இந்நிலையில் இந்த அருவிக்கு ஹைவேவிஸ் மலை பகுதியில் இருந்து வனப்பகுதிகளின் வழியாக பலவிதமான மூலிகைகளில் பட்டு தண்ணீர் வருவதால் இதில் அதிக மருத்துவ குணம் உள்ளதாக நம்பப்படுகிறது தற்போது கடந்த சில . தினங்களாக தேனி மாவட்ட பகுதிகளில் பரவலாக சாரல் மழை பெய்து வருவதால் அருவிக்கு வரும் நீர்வரத்து படிப்படியாக அதிகரித்து வருகிறது இதனால் இங்கு வரும் . சுற்றுலா பயணிகளும், பக்தர்களும் மகிழ்ச்சியுடன் நீராடி விட்டு செல்கின்றனர்.